# சிவகங்கை மாவட்ட முதன்மைக்கல்விஅலுவலரின்செயல்முறைகள்

**பிறப்பிப்பவர் : திரு.இரா.சுவாமிநாதன், எம்.எஸ்சி., பி.எட்., எம்.பில்.**

ந.க.எண்.7818/அ1/2022 நாள். 12/10/2022

---

பொருள்: பள்ளிக்கல்வி – கருணை அடிப்படையில் நியமனம் – 2020-2021 & 2021-2022ம்ஆண்டிற்குரிய காலிப்பணியிட மதிப்பீடு கருணை அடிப்படையில் இளநிலைஉதவியாளர் பணியிடங்கள் நிரப்புதல் - ஆணை வழங்குதல் – சார்ந்து..

பார்வை :

1. அரசாணை (நிலை)எண்.18 தொழிலாளர்மற்றும்வேலைவாய்ப்புத் (Q1)துறைநாள்: 23.01.2020
2. சம்பந்தப்பட்டவரின்கருத்துரு
3. அரசாணை (நிலை) எண்.151 பள்ளிக்கல்வித் (SE1(1)) துறைநாள்: 09.09.2022.
4. தமிழ்நாடுபள்ளிக்கல்விஆணையரகஇணைஇயக்குநரின் (பணியாளர்தொகுதி) ந.க.எண். 39671/ஜே/இ4/2021, நாள்:10-10-2022

பார்வையில் காணும் அரசாணைகள், ஆணையரகத்தினால் வழங்கப்பட்ட அறிவுரைகள் மற்றும் பணிநாடுநர்களால் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள வட்டாட்சியரின் சான்றுகளின் அடிப்படையில் பணிக்காலத்தில் காலமான கீழ்க்குறிப்பிட்டுள்ள அரசுஊழியரின் வாரிசுதாரருக்கு தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ்வரும் இளநிலைஉதவியாளர்பதவியில் கருணை அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக நியமனம் செய்து ஆணைவழங்கப்படுகிறது

| பெயர் மற்றும் முகவரி (திரு/திருமதி/செல்வி) | இறந்தஅரசுஊழியரின் பெயர், பதவி (ம) பணிபுரிந்தஅலுவலகம் / பள்ளி திரு./திருமதி. | இறந்ததேதி | நியமனஆணைவழங்கப்படும்அலுவலகம் / பள்ளி |
|---|---|---|---|
| அ, மெர்லின் ஜெனிபர்,<br>எண். 13, ஜே,வி, நகர்,<br>வங்கி ஊழியர் காலனி,<br>12வது தெரு,<br>மாதாக்கோட்டை ரோடு,<br>தஞ்சாவூர் | M. தூசை லூர்து மேரி,<br>தலைமையாசிரியர்,<br>ஊராட்சி ஒன்றிய<br>நடுநிலைப்பள்ளி,<br>கீழப்பிடாவூர்,<br>மானாமதுரை ஒன்றியம். | 16/10/2015 | அரசு மகளிர்<br>உயர்நிலைப்பள்ளி,<br>கல்லல்<br>சிவகங்கை<br>மாவட்டடம். |

1. நியமனம் பெற்றுள்ள நபர் இந்நியமன ஆணை கிடைக்கப்பெற்ற உடன் பணியில் சேரவேண்டும்.

2. மேற்கண்டவாறு பணிநியமன ஆணை வழங்கப்பட்டவருக்கு தமிழ்நாடு திருத்திய ஊதிய விதிகள் 2017ன்கீழ், அரசாணை (நிலை) எண்.303/நிதி (ஊதியக்குழு) த்துறை நாள்.11.10.2017ன்படி, Level-8, 19500-62000 என்ற ஊதிய தொகுப்பில் அடிப்படை ஊதியம் மற்றும் இதரப்படிகள் ஆகியவை பெறத்தகுதியுடையவராவார்.

3. நியமனம் பெற்றுள்ள நபர் பணியில் சேரும் போது உதவி மருத்துவ அலுவலரிடமிருந்து உடல்நலத் தகுதி சான்றினைப் பெற்று பணியில் சேர வேண்டும்.

4. இப்பணியாளர் ஓய்வூதியப் பங்களிப்புத் திட்டத்தின் (Contributory Pension Scheme) கீழ்மட்டும் பணியில் சேரத் தகுதியுடையவராகிறார்.

5. கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றுள்ள நபரால் பணிவாய்ப்புக்காக முன்னிலைப்படுத்தப்பட்ட கல்விச்சான்று மற்றும் இதர ஆவணங்கள் ஆகியவை உண்மையானவை அல்ல என்றோ அல்லது மதிப்பீடு செய்ய இயலாதவை என்றோ பின்னாளில் கண்டறியப்பட்டால் இந்நியமனமானது எவ்விதமான முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

6. தனியர் தகுதிகாண் பருவகாலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடை முறைநூல்தேர்வில்தேர்ச்சிபெறவேண்டும்.

7. நியமனம் பெற்றுள்ள நபர் பத்தாம்வகுப்பு பொதுத்தேர்வில் தமிழை ஒரு பாடமாக பயின்று தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். இல்லையெனில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்மொழி இரண்டாம்நிலை மொழித்தேர்வில் பணியில்சேர்ந்த இரண்டு ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெற வேண்டும்.

.8. பணிநியமனஆணையின்படிஅன்னார்பணியில்சேர்ந்ததற்கானபணியேற்புஅறிக்கையினை உடன்அனுப்பிவைக்குமாறுசார்ந்தஅலுவலர்கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. பார்வை1-ல் காணும் அரசாணையின்படி கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்படும் நபர்களின் பணியினை விதிகளின்படி, ஓராண்டிற்குள் பணிவரன்முறை செய்திட விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள சார்ந்த தலைமையாசிரியர்/வட்டாரக்கல்வி/ மாவட்டக்கல்வி அலுவலர் (இடைநிலை)/ மாவட்டக்கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி) அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது

முதன்மைக்கல்வி அலுவலர்,

சிவகங்கை.

பெறுநர்:

அ, மெர்லின் ஜெனிபர், எண். 13, ஜே,வி, நகர், வங்கி ஊழியர் காலனி,

12வது தெரு, மாதாக்கோட்டை ரோடு, தஞ்சாவூர்

நகல்கள்:

1. சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரக இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிது
2. மாவட்டக்கல்வி அலுவலர், (இடைநிலை) சிவகங்கை.
3. தலைமையாசிரியர், அரசு (ம) உயர்நிலைப்பள்ளி, கல்லல்
4. வட்டாரக்கல்வி அலுவலர், மானாமதுரை